மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 147, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

147—

கால்நடைக் கிளை நிலையம்

***1202—திரு. சு. ரவி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், தண்டலம் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, தண்டலம் ஊராட்சி, தண்டலம் கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,000-க்கும் அதிகமாக, அதாவது, 3,652 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன. ஆகவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய தண்டலம் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரார்த்திக்கும் உதடுகளைவிட, உதவும் கரங்கள் சிறந்தது என்றார் அன்னை தெரசா. மாண்புமிகு அம்மா அவர்கள், பெண்களுக்கு விலையில்லா ஆடுகள், மாடுகள் கொடுத்ததைப்போல, 38,500 கிராமப்புறப் பெண்களுக்கு தலா 50 நாட்டுக் கோழிகள் வளர்க்கும் திட்டத்தை ரூ.25 கோடியில் அறிவித்து, மாண்புமிகு அம்மா*

2018 ஜூன் 7]

அவர்களுடைய இலக்கை நிறைவேற்றிட, இதுவரை தோல்வி என்பதே அறியாமல், எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி என தொடர்ந்து வெற்றி நடை போட்டுவரும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் வணங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரக்கோணம் தொகுதிக்குட்பட்ட தண்டலம் கிராமத்திலே கால்நடைக் கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்ற கேள்விக்கு, கால்நடைக் கிளை நிலையம் அமைக்கப்படும், பரிசீலிக்கப்படும் என்ற ஒரு நல்ல பதிலைத் தந்த மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், எனது அரக்கோணம் தொகுதியில் 12 கால்நடை மருந்தகங்களும், 3 கால்நடை கிளை மையங்களும் இயங்கி வருகின்றன. ஆனால், இதுவரை கால்நடை வட்ட மருத்துவமனை இல்லாமல் இருந்து வருகிறது. எனவே, இன்றைக்கு வாயில்லா ஜீவன்களுக்கும் பரிவோடு கருணை காட்டி வரும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள், கேட்டதையெல்லாம் வாரிக் கொடுத்து வரும் இந்த வேளையில், என் தொகுதியில் மத்தியப் பகுதியில் உள்ள தக்கோலம் கால்நடை மருந்தகத்தை, வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த இணை இயக்குநரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்கள், தக்கோலம் கால்நடை மருந்தகத்தை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடை மருந்தகத்தை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். துறை அதிகாரிகளினுடைய கருத்துகள் பெறப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, தேவைப்படுமாயின், அங்கே வட்ட மருத்துவமனை அமைப்பதற்குப்

[2018 ஜூன் 7

பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி அவர்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துரோகிகளை இனம் கண்டு, தடைகள் கோடி எதிர்கொண்டு, படைகள் நூறு களம் கண்டு, தமிழர் மானம் காத்த எங்கள் தாய் மாண்புமிகு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஓய்வறியாது சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து, தருமத்தின் வழியில் உச்ச நீதிமன்றத்தில் தொடர் சட்டப் போராட்டம் நடத்தி, சத்தியத்தின் வழியில் காவேரியை மீட்டெடுத்து, தமிழக ஜீவாதார உரிமைகளைப் பாதுகாத்துத் தந்திட்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித அரசை தலைமை தாங்கி, வெற்றிப் பாதையில் வழி நடத்தி வருகின்ற கொங்கு நாட்டுத் தங்கம், தமிழக விவசாயிகளின் பாதுகாவலர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், அவருக்கு உறுதுணையாக இருந்து வெற்றியைத் தந்த பாண்டிய நாட்டு மணிமகுடம் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய் நாட்டின் வெற்றிக்காக தலைசிறந்த வழக்கறிஞர்களை அடையாளம் கண்டு, அவர்களோடு சட்ட நுணுக்கங்களை எடுத்து வைத்து, மாபெரும் வெற்றிக்கு வழிவகுத்த மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

2018 ஜுன் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் கல்வி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, திருச்செங்கோட்டை தலைமையிடமாகக் கொண்டு, மாவட்டக் கல்வி அலுவலகத்தை அமைத்துக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்கள் மாவட்ட அமைச்சர் பெருமக்களுக்கும் எங்கள் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றியம், செண்பகமாதேவி ஊராட்சி ஒன்றியத்தைச் சுற்றியுள்ள பள்ளக்குழி, பள்ளக்குழி அக்ரஹாரம்... (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி, நீங்கள் கேள்வியைக் கேளுங்கள். நன்றியை நேராக சொல்லிக்கொள்ளலாம். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அனைவரும் அமைதியாக இருங்கள்.*

திருமதி பொன். சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்செங்கோடு தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றியம், செண்பகமாதேவி ஊராட்சி ஒன்றியத்தைச் சுற்றியுள்ள பள்ளக்குழி, பள்ளக்குழி அக்ரஹாரம், மங்களம், கூத்தாநத்தம், ஈ.புதுப்பாளையம் மற்றும் இருகலூர் போன்ற ஊராட்சிகளில் மொத்தமாக, சுமார், 15,000 விவசாயிகள் இருக்கின்றார்கள். அவர்கள் 15,000 ஆடு, மாடுகள் மற்றும் கோழிகளை வளர்த்து வருகின்றார்கள். இந்தக் கால்நடைகளின் மருத்துவ வசதிக்காக, சுற்றுப்புற மக்கள் அங்கிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள சூரியகவுண்டம்பாளையம் கால்நடைக் கிளை நிலையத்திற்கு செல்ல வேண்டியுள்ளது. ஆகவே, செண்பகமாதேவி ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அந்தக் கிராமப் பகுதிகளில், 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கால்நடைகள் இருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஆண்டு, சரித்திரத்தில் இல்லாத வகையில், 125 கால்நடைக் கிளை நிலையங்களைக் கொடுத்து, அற்புதமான ஒரு சாதனையைப் படைத்திருக்கிறார்கள் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கெல்லாம் கால்நடைக் கிளை நிலையங்கள் அமைக்க வேண்டுமென்று கருத்துரு வரப்பெற்று, தேவைப்படுமாயின், அங்கெல்லாம் அமைக்கலாம் என்று ஏற்கெனவே, துறை ரீதியாக நடைபெற்ற கூட்டத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச்சொல்லி, கண்டிப்பாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

148—

துணை சுகாதார நிலையம்

***16197—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி ஒன்றியம், தெக்களூர் கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?